
## திராவிடத்தால் வாழ்கிறோம்

892

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்


## மாநாடு

ர.பிரகாசு

71

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்



# பெரியாரால் சுயமரியாதையை அடைகிறோம்!

வட ஆற்காடு ஜில்லா, 'பார்ப்பனரல்லாத வாலிபர்கள் சங்கத்தின் முதலாவது மாநாடு', 1929-ஆம் ஆண்டு ஜனவரி 4, 5 ஆகிய தேதிகளில் வேலூர் லட்சுமண முதலியார் நகர மண்டபத்தில் நடைபெற்றது. பேரணியில் தலைவர்களுக்கு மோட்டார் வாகனம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், நடந்தே செல்லலாம் என பெரியார் கூறிவிட்டார். வழக்கறிஞர் கிருஷ்ண ரெட்டியார் இல்லத்தில் இருந்து பாண்டு வாத்தியங்கள் முழங்க, காலை 9 மணிக்கு புறப்பட்ட ஊர்வலம், மண்டபத்தை அடைய 11 மணி ஆனது. ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை என வழியெங்கும் பழங்கள் வழங்கி, மாலைகள் அணிவித்து மக்கள் உபசரித்தனர்.

மாநாட்டுக் கொடியை ஏற்றிவைத்து, உரையாற்றிய ராவ் பகதூர் எம்.கே.ரெட்டியார், "தோழர்களே நமது இயக்கத்தின் கொள்கை வெறும் பேச்சல்ல, செயல். மூடநம்பிக்கை என்னும் சனியன் நம்மைப் பிடித்து முன்னேற விடாமல் தடுக்கிறது. அதை ஒழித்து வெற்றி பெறுவதே நமது நோக்கம்" என்றார்.

அதன்பிறகு தந்தை பெரியார் மாநாட்டைத் திறந்துவைத்தார். "ஆரியா அவர்களால் தொடங்கப்பட்ட பார்ப்பனரல்லாதோர் வாலிபர் சங்கமானது, இப்போது நமது நாடு முழுவதும் ஏற்பட்டு பெருத்த கிளர்ச்சி செய்து வருகிறது. எனது இயக்கத்தையும் தொண்டையும், உடல் நலிவும் சரீர தளர்ச்சியும், எதிரிகள் தொல்லையும் ஒரு சிறிதும் என்னைத் தடை செய்ய முடியாமல், மேலும் மேலும் உற்சாகப்படுத்தி, வெற்றிக்கொடியை நாட்டி வருவதற்கு பெரிதும் உதவியாக இருந்து வருவது இந்த வாலிபர் சங்கமே. வெகு சீக்கிரத்தில் இந்த வாலிபர்கள் உலகை நடத்த முன்வர வேண்டும் என்று ஆசைப்பட்டுக்கொண்டு இம்மாநாட்டை திறக்கிறேன்" என பெரியார் கூறியபோது, அரங்கம் கரவொலியில் அதிர்ந்தது.

நகர்மன்றத் தலைவராக இருந்த பத்மநாப முதலியார் வரவேற்புரை ஆற்றினார். அதன்பிறகு மாநாட்டுத் தலைமை உரையை வாசித்த கேசவ மேனன், "ஸ்திரீகட்கு (பெண்களுக்கு) சகல உரிமைகளையும் மறுத்து, நடைப்பிணங்களாக நடத்தி வருவது என்ன கொடுமை? இதையெல்லாம் விட்டொழித்து, பால்ய விவாகத்தைத் தடுக்க வேண்டும், விதவை மறுமணத்தை ஆதரிக்க வேண்டும். ஜாதி பேதத்திற்கு எதிராக கிராமம்தோறும் பிரச்சாரம் செய்ய வேண்டும். நம் மத்தியில் வைக்கம் வீரர் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் இருக்கிறார். அவரைப் பின்பற்றினால், நமக்கு வெற்றி கிடைப்பதில் ஐயமில்லை" என்றார்.

அதன்பிறகு திருமதி மார்த்தா ஆரியா, தந்தை பெரியாரின் படத்தைத் திறந்துவைத்து, சிறப்பானதொரு உரையாற்றினார். "ஈ. வெ.ராமசாமி நாயக்கரை ஒப்பற்ற பெரியாரென்று மதித்திருக்கின்றேன். அவரைப் பற்றி புகழ எதுவும் சொல்லப்போவதில்லை. நான் ஒரு பெண் என்ற முறையில் நாயக்கருக்குக் காட்ட வேண்டிய நன்றி மிக அதிகம் உள்ளது. ஒரு நாட்டில் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்றால், அது கொடுமையும் மூடத்தன்மையும் கொண்ட ஒரு கூட்டத்தால் தங்கள் சுயநலம் கருதி, சூழ்ச்சியாலும் புரட்டினாலும் சாதுக்களை அழுத்தி வைத்திருக்கும் அக்கிரமச் செயலாகும். அப்படி தாழ்த்தப்பட்ட மக்களைக் கை தூக்கி விடுகிறார் ராமசாமி நாயக்கர். ஜாதியில் உயர்வு தாழ்வு உண்டு என்பதற்கு ஆதாரமான எல்லாவற்றையும் குப்பைத்தொட்டியில் போடச் சொல்லுகிறார். மானுடப் பற்றைப் பறைசாற்றுகிறார். அதைக் கேட்பவர்கள் மயக்கத்தில் இருந்து எழுந்து ஜாதி- பேதக் கொடுமையில் இருந்து விலகி சுயமரியாதையை அடைகிறார்கள்" என்றார்.

தமிழ்நாடு இன்றும் சுயமரியதையைப் பெறுகிறது பெரியாரால்...

**...கூட்டம் திரளும்**

### ரகசிய நிதியில் இயங்கும் ஆர்.எஸ்.எஸ்.!

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு, கடந்த சில மாதங்களுக்கு முன் டெல்லியில் பிரமாண்டமான அலுவலகத்தைக் கட்டியது. 13 மாடிகளுடன் 5 லட்சம் சதுர அடி பரப்பளவில், 300 அறைகளுக்கு மேல் கொண்ட அந்தக் கட்டடத்தின் திறப்பு விழாவில் பா.ஜ.க.வின் அனைத்து தலைவர்களும் பங்கேற்றனர். இந்த நிலையில், கர்நாடக அமைச்சர் பிரியங்க் கார்கே, ஆர்.எஸ்.எஸ்.-இன் டெல்லி தலைமையகத்திற்கான நிதி ஆதாரம் குறித்து, கேள்வி எழுப்பியிருக்கிறார். "ஆர்.எஸ்.எஸ். எங்கிருந்து பணம் பெறுகிறது? அவர்கள் ரூ.300 கோடி முதல் ரூ.400 கோடி மதிப்புள்ள அலுவலகக் கட்டடங்களைக் கட்டுகின்றனர். அதற்கு பணம் அளிப்பது யார்? அவர்களின் நிதி ஏன் இவ்வளவு தெளிவற்றதாக இருக்கிறது? யாருக்காவது பதில் தெரிந்தால் சொல்லுங்கள்" என விமர்சனம் செய்துள்ளார்.

பதிவு செய்யப்படாத அமைப்பான ஆர்.எஸ்.எஸ், நிதி ஆதாரங்களில் இதுவரை வெளிப்படையாக இருந்ததில்லை. வருமான வரி கணக்கைத் தாக்கல் செய்வதில்லை என்றும் தகவல்கள் உள்ளன. 2014-ஆம் ஆண்டு ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைந்தது முதல் ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட சங் பரிவார் அமைப்புகளின் செல்வாக்கும் நிதி ஆதாரமும் பலமடங்கு அதிகரித்துள்ளது எனக் குற்றச்சாட்டு உள்ளது.

தானாக முன்வந்து யாரேனும் பணம் அளித்தாலும், அதை ஏற்றுக்கொள்வதில்லை என கூறிக்கொள்ளும் ஆர்.எஸ்.எஸ். 300 கோடி ரூபாயில் கட்டடம் எழுப்பியது எப்படி என பிரியங்க் கார்கே எழுப்பியுள்ள கேள்வி பல அதிர்வுகளை உருவாக்கியுள்ளது.

விசாரணை அமைப்புகளை தங்கள் வசதிக்கு ஏற்ப பயன்படுத்தும், ஒன்றிய பா.ஜ.க. அரசு, ஆர்.எஸ்.எஸ். நிதி ஆதாரத்துக்குப் பதில் அளிக்குமா?

## ஃப்ளாஷ்பேக்



### மூன்று தலைமுறையாக கழகப் பணியில்...



என்.கே.ஆர். எஸ்.ஸ்ரீகீர்த்திராஜன்

1977-ஆம் ஆண்டு, நெருக்கடி காலக் கொடூரங்களுக்குப் பின்னர் நடைபெற்ற தேர்தலின்போது, நாட்றம்பள்ளி தொகுதிப் பிரச்சாரத்துக்கு வந்த தலைவர்களுக்கு எங்கள் வீட்டில் இரவு உணவு பரிமாறுகிறார் எனது தாத்தா கழக முன்னோடி, அன்றைய நாட்றம்பள்ளி ஒன்றியக் கழகச் செயலாளர் என்.கே.ராஜா. மின்சாரம் இல்லாத நிலையில், மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் உணவருந்தும் கழகத் தலைவர்கள் இனமானப் பேராசிரியர், ஆற்காட்டார், இன்றைய கழகப்பொதுச்செயலாளர் துரைமுருகன் ஆகியோர். மூன்றாவது தலைமுறையாக கழகப் பணியில் நான் ஈடுபடுவது பெருமையளிக்கிறது.

**-என்.கே.ஆர்.எஸ்.ஸ்ரீகீர்த்திராஜன்,**
**இளைஞர் அணி அமைப்பாளர்,**
**நாட்றம்பள்ளி பேரூர், திருப்பத்தூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

71

**சுயமரியாதை-சமத்துவம்- சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# இந்தி-யா? இந்தியாவா?

'இந்தி ஆதிக்கத்துக்கு எதிராகத் தமிழ்நாடு நடத்திவரும் போராட்டம் உணர்வுமயமானது மட்டுமல்ல, அறிவுப்பூர்வமானது! தர்க்கப்பூர்வமானது! இந்தியாவின் பன்மைக் கலாசாரத்தை பாதுகாப்பதற்கானது!' என்று பெருமிதம் ததும்பக் கூறியிருக்கிறார் கழகத் தலைவர் அவர்கள். ஆதிக்க இந்தித் திணிப்பிற்கு எதிராக மராட்டியத்தில் போராட்டச் சூழல் மூண்டதைத் தொடர்ந்து, மக்கள் எழுச்சிக்கு அஞ்சி, இரண்டாம் முறையாகப் பின்வாங்கி இருக்கிறது பாசிச பா.ஜ.க.

"இந்தி பேசும் மாநிலங்கள் பின்தங்கி இருக்கின்றன. இந்தி பேசாத முன்னேறிய மாநிலங்களின் மக்கள் மீது ஏன் இந்தியைத் திணிக்கிறீர்கள்?" என்றும் "உத்தரப் பிரதேசத்திலும் ராஜஸ்தானிலும் கற்பிக்கப்படும் மூன்றாம் மொழி என்ன?" என்றும் ராஜ் தாக்கரே அவர்கள் எழுப்பிய கேள்விகள் மும்மொழிக் கொள்கையின் பயனற்ற தன்மையைக் குறிப்பதாக வெளிப்பட்டுள்ளன. இந்நிலையில் நூற்றாண்டு காலமாக சமஸ்கிருத- இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துவரும் தமிழ்நாட்டின் போராட்ட வரலாற்றை- அதன் அடிப்படைகளை-அதனால் விளைந்த நன்மைகளை- மும்மொழிக் கொள்கையின் பாதகங்களை அறிந்து கொள்வது அவசியமாகிறது.




ஜூன்-15- 2025 அன்று, சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், 'தமிழின் சம உரிமைக்கான போராட்டம்' என்ற ஆய்வரங்கத்தில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் கருஞ்சட்டை பதிப்பகத்தால் நூலாக்கம் பெற்றுள்ளன. எழுத்தாளர் ப.திருமாவேலன், அரசியல் செயற்பாட்டாளர் மருதையன், எழுத்தாளர் சுகுணா திவாகர் மற்றும் ஆய்வாளர் தமிழ் காமராசன் ஆகியோர் வாசித்த ஆழமும் அடர்த்தியும் கொண்ட நான்கு கட்டுரைகள் இந்தச் சிறு தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

ஆதிக்க இந்தியை எதிர்த்தும்-தமிழ் மொழி உரிமைக்காகவும் பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் முன்னெடுத்த போராட்டங்களை, கால வரிசையில் பட்டியலிட்டு எழுதப்பட்டுள்ள, எழுத்தாளர் ப.திருமாவேலன் அவர்களின் கட்டுரை தாய் மொழி காக்க நாம் முன்னெடுத்த போராட்டங்களைக் கண் முன் நிறுத்துகிறது.

இந்தித் திணிப்பு எதிர்ப்பு என்பது மொழியுரிமைக்கான குரல் மட்டுமல்ல, அது பழங்குடிகள், சிறுபான்மையினர், பட்டியலினத்தவர் உள்ளிட்டவர்களின் உரிமைகள் குறித்த புரிதலுடன் நடத்தப்படும் பார்ப்பனியப் பண்பாட்டுக்கு எதிரான போராட்டம், என்று உரைக்கும் எழுத்தாளர் சுகுணா திவாகர் அவர்களின் கட்டுரை சமகால சிக்கல்களையும் சேர்த்தே கவனப்படுத்துகிறது. மருதையன் அவர்களின் கட்டுரை இந்தி உண்டு செரித்த மொழிகளின் அவல நிலையையும், பெரும் பான்மை வாதம் என்கிற பெயரில், இந்தி ஆதிக்கவாதிகள் நிகழ்த்திவரும் கோரங்களையும் இந்தி உருவான வரலாற்றையும் சேர்த்தே கவனப்படுத்துகிறது.

அதை போலவே மொழி உரிமைப் போராட்டத்தின் விளைவாக தமிழ்நாட்டில் வென்றெடுக்கப்பட்ட 'இருமொழிக் கொள்கை' யின் தோற்றுவாய் குறித்தும் அது செயல்பாட்டில் எவ்வாறாக உள்ளது என்பது பற்றியும் விவாதிக்கும் தமிழ் காமராசன் அவர்களின் கட்டுரை விழிப்புடன் இருக்க வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

'இந்தி-யா? இந்தியாவா?' என்ற தீரம் மிகுந்த கேள்விகளைக் கேட்ட மொழி உரிமைப் போராட்ட காலத்திற்கு மீண்டும் ஒன்றிய அரசு மக்களைத் தயார்படுத்திக் கொண்டிருப்பதைத்தான் அதன் அண்மைக்கால செயல்பாடுகள் நமக்கு உணர்த்துகின்றன, மொழி ஆதிக்கத்தை எதிர்த்து, மொழி சமத்துவத்தைக் கோரும் தமிழ்நாட்டின் குரலை எளிமையான வகையில் கடத்தும் இந்நூல் அவசியம் வாசிக்கப்பட வேண்டிய ஒன்று.

**...வாசிப்போம்.**

### நம் உருவு (வருக)

### எதிர்க்கட்சிப் பணியும் எழுத்தும்

1976-இல் கழக அரசு கலைக்கப்பட்ட பிறகும், எதிர்க்கட்சியாக செயல்பட்ட வேளையிலும் மீண்டும் திரைப்படத்துறையில் கவனம் செலுத்தினார் கலைஞர். வண்டிக்காரன் மகன், மாடி வீட்டு ஏழை, தூக்குமேடை, பாலைவன ரோஜாக்கள், ஒரே ரத்தம், புயல் பாடும் பாட்டு, நீதிக்குத் தண்டனை, பாசப் பறவைகள், பாடாத தேனீக்கள், தென்றல் சுடும், நியாயத் தராசு, பொறுத்தது போதும், பாச மழை, காவலுக்குக் கெட்டிக்காரன், வீரன் வேலுத்தம்பி உள்ளிட்ட பல படங்களுக்கு அக்காலகட்டத்தில் கலைஞர் வசனம் எழுதினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131